DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 84/2020

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.08.2024

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நீதிமன்றத்திலிருந்து கிடைத்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் யூனியன் பேங்க் சோத்துப்பாக்கம் கிளையில் கிளை மேளாலராக உள்ளேன். ஏற்கனவே எங்கள் வங்கி கார்ப்ரேட் வங்கியாக இருந்து தற்போது யூனியன் பேங்கோடு கலந்துவிட்டது. இவ்வழக்கில் வாதி எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். வழக்கு காசோலையை 30.01.2020 அன்று எங்கள் வங்கியில் செலுத்தப்பட்டது. வழக்கு காசோலை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஜனாவரம் கிளையின் காசோலை என்றால் சரிதான். அதன் எண் 122802 ஆகும். மகாலட்சுமி என்பவர் காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலைதான் மசாஆ 2 ஆகும். வங்கி கணக்கில் stop payment கொடுத்த காரணத்தினால் காசோலை திருப்பப்பட்டது. அந்த return memo மசாஆ 3 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

2. நான் 16 வருடங்களாக யூனியன் பேங்கில் வேலை செய்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கார்பரேஷன் வங்கியில் இருந்து தற்போது யூனியன் பேங்கில் வேலை மாற்றம் செய்யப்பட்டேனா என்றால் இல்லை. நான் யூனியன் பேங்கில் தான் வேலையில் சேர்ந்தேன். நான் சோத்துப்பாக்கம் கிளையில் 1 1/2 மாதமாக ஜீன் 24 முதல் வேலை செய்து வருகிறேன். எனக்கு தனிப்பட்ட முறையில் எழிலரசன் பற்றி தெரியாது. வங்கியின் வாடிக்கையாளராக தெரியும். அவர் வங்கிக்கு வந்து செல்வதை பார்த்துள்ளேன். வாதியின் வங்கி கணக்கில் நெட் பேங்கிங் வசதி உள்ளது அது அவர்களாகவே சுயமாக பயன்படுத்தப்படுகிறது.

3. நெட் பேங்கிங் மூலம் ரூபாய் 5 லட்சம் வரை பண பறிமாற்றம் செய்யலாம். அதற்கு மேற்பட்ட தொகைக்கு வங்கி மூலம் செய்ய வேண்டும். காசோலை எண் 122802 காசோலை சம்மந்தமாக விவரம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். எந்த காரணத்திற்காக payment stop செய்யப்பட்டது என்ற விவரம் வங்கிக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகாலட்சுமி என்ற நபர்தான் வாதிக்கு காசோலை கொடுத்துள்ளாரா

என்றால் காசோலையில் மகாலட்சுமி என்றவர் பெயர் தான் உள்ளது. எதிரி மகாலட்சுமி என்பவர் பெயரில் எத்தனை காசோலைகள் எங்கள் வங்கியில் செலுத்தப்பட்டது என்றால் வழக்கு காசோலை மற்றும் 122801 என்ற எண் கொண்ட காசோலை, மொத்தம் இரண்டு காசோலைகள் இதுவரை செலுத்தப்பட்டுள்ளது. 122801 என்ற எண் கொண்ட காசோலை ரூபாய் 7 லட்சத்துக்கு 11.06.2018 தேதியிடப்பட்டது. அது எப்போது வங்கியில் செலுத்தப்பட்டது என்று ஆவணத்தை பார்த்தால் தெரியும்.

4. மேற்படி 122801 காசோலை திருப்பப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 122800 எண் கொண்ட காசோலை எதிரி பெயரில் செலுத்தப்பட்டதா என்றால் தெரியாது. 11.09.2017 ம் தேதி ரூபாய் 50000/– வாதியின் வங்கி கணக்கில் பண பறிமாற்றம் டெபாசிட் கிடைக்கப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்தால் தெரியும். வாதியால் 2017 ஆண்டிற்கான பண பறிமாற்ற ஸ்டேட்மெண்டை தானாக எடுக்க முடியுமா என்றால் கார்ப்பரேஷன் பேங்கில் அந்த வசதி இல்லை. யூனியன் பேங்கில் அந்த வசதி உள்ளது. 2017 2018 2019 ஆண்டுகளில் பண பறிமாற்ற ஸ்டேட்மெண்ட் என்னால் எடுக்க முடியுமா என்றால் எடுக்க முடியும். தற்போது அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை. எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் சிறிதளவு தான் தெரிந்துள்ளது என்றாலும் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணமும் நான் கொண்டுவரவில்லை என்றாலும் சரியல்ல.